18th November 1963]

(a) The drinking water for Tiruvannamalai will be taken from the river Ponniyar Anicut near Olagalapadi. This scheme was sanctioned in June 1963.

(b) The estimated cost of the scheme is Rs. 47.73 lakhs to install and Rs. 94,000 to maintain annually.

(c) The scheme will be taken for execution during 1963-64.

***223 கேள்வி.—திரு. இராம அரங்கண்ணல் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் திருவண்ணமலை குடி தண்ணீர் சப்ளைக்கான விரிவான திட்டம் ஒன்றை சர்க்கார் அனுமதித் துள்ளனர் என்பது உண்மையா?

(இ) இதுபற்றி மேற்படியூரில் உள்ள பொது ஸ்தாபனங்கள் விண்ணப்பம் ஏதேனும் செய்துள்ளனவா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) ஆமாம்.

(இ) இல்லை.

***224 கேள்வி—திரு. கோ. சி. மணி :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருவண்ணமலை நகராட்சிக் குடிநீர் திட்டத்துக்கென அரசாங்கம் கடனுதவி அளித்திருப்பது உண்மையா?

(இ) திருவண்ணமலை நகராட்சி கடனுதவி கோரி மனுவை அரசாங்கத்திற்கு அனுப்பியுள்ளதா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) இதுவரை எந்தக் கடனும் வழங்கவில்லை.

(இ) கடன் மனு எதுவும் வரவில்லை.

திரு. ப. உ. சண்முகம் : ஜூன் மாதத்தில் இந்தத் திட்டம் சர்க்காரால் அனுமதிக்கப்பட்டது என்று சொன்னர்கள். திருவண்ணமலை இடைத் தேர்தலை ஒட்டி, இந்தத் திட்டத்தை அவசரம் அவசரமாக அனுமதித்ததற்கு காரணம் என்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஜனங்கள் தண்ணீருக் காகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்ததுதான் காரணம்.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஏற்கெனவே பல திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு, நிறைவேற்றப்படாமல் நிறுத்திவைக்கப் பட்டிருந்த நேரத்தில் திருவண்ணமலைத் திட்டத்தை மட்டும் எடுத்துக்கொண்டதற்கு என்ன காரணம்?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : திருவண்ணமலைப் பகுதியில் எப்போதுமே குடி தண்ணீர் கஷ்டம் உண்டு. அதை உணர்ந்து தான் இந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டது.